இந்த முயற்சியில், எவன் நம்முடன் சேரவில்லையோ, அவன் நம்முடைய விரோதியாகிறான். இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எவன் தன் பொருட்டாவது, அல்லது இராஜகாரியங்கள் பொருட்டாவது, ஏற்பட்ட பகைமையினால், எதிரியின் வெற்றியையோ, அல்லது பிரிடிஷாரின் பின்வாங்குதலையோ கேட்டு, அவைகளினால் மகிழ்ந்து, அவைகளைப்பற்றி, அயலாரிடத்து அதிகப் படுத்திப் பேசுகிறானோ, அவன் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும், நமக்கும், விரோதியாகிறான். எவன் தன்னுடைய உடைமைகளைப்பற்றியோ அல்லது செல்வங்களைப் பற்றியோமாத்திரம் எண்ணுகிறானோ, எவன் தன்னிடத்துள்ள நோட்டுகளை எல்லாம் ரூபாய்களாக்க விரும்பி, அவ்வாறு செய்யவேண்டுமென்ற முடிவிற்கு வருகிறானோ, எவன் நல்ல நிலைமையில் இருக்கின்ற பாங்கியில் உள்ள, தன் சேமிப்பையெல்லாம் திரும்பவாங்கிப் பூமியில் புதைத்துவைக்க விரும்புகிறானோ அவனும் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும், நமக்கும் விரோதியாகிறான். எவன், உண்மையாக இருக்கின்ற விஷயங்களுக்கு மாறாக, இல்லாதவைகளைக் கிளப்புதற்கும், முதலாளித்துவத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வதற்கும், அரசாங்கத்திற்கு விரோதமாக ஜனங்களைக் கிளர்ச்சி செய்யும்படி தூண்டுதற்கும், இச்சமயம்தான் ஏற்றது, என்று எண்ணுகிறானோ, அவன் தனக்குப் போராத காலத்தைத் தேடிக்கொள்ளுகிறானேயொழிய வேறல்ல. இந்தப் பிரசினைகள் எல்லாம், நம்முடைய சங்கற்பமில்லாமலே ஒரு முடிவடையும் நிலைமையில் இருந்துவருகின்றன. அவைகள், தற்போது, பொருட்படுத்தவேண்டிய பெரிய விஷயங்களாகத் தோன்றவில்லை. எவன் இவ்விஷயங்களை எல்லாம் பெரிதாகக் கருதுகிறானோ, அவன் நமது விரோதிக்கு உதவிசெய்கிறவன் ஆகிறான். எவன், எல்லா முயற்சிகளையும் புறக்கணித்து, உலகத்தின் நெருக்கடிக்கும் அவனுக்கும், யாதொரு சம்பந்தமும் இல்லையென்று பாசாங்கு செய்து, அதிகாரிகளுக்கு உதவி செய்யாமலும், நல்ல காரியங்களுக்காகச் செய்யப்படுகின்ற பொது முயற்சியில் சேராமலுமிருக்கிறானோ அவன் நம்முடைய பகைவருக்கு உதவி செய்கிறவன் ஆகிறான்.

பிரசங்கம் VII.

ஐந்தாம் படை.

யுத்தமாரம்பித்த நாளாக '5-ம் படை' என்ற வார்த்தை அடிக்கடி காதில் படுகிறது. இது பத்திரிகைகளில் அடிக்கடி தலைப்பெயராக உபயோகப்பட்டு சாமான்ய வார்த்தையாயுமாய் விட்டது. ஆனால் இதின் தாத்பரியம் சகஜமாகத் தெரியவில்லை. அநேக தேசங்களில் 5-ம் படை கெட்டவழிகளிலிறங்கி அநர்த்தங்களை விளைவித்திருக்கிறது. இந்தியாவோ வதந்திகளுக்கும் வம்புக்கும் பிறந்த விடம். இந்த தேசத்தில் பொய் செய்திகள் ஏராளமாகக்கட்டப்பட்டு விரைவில் பரவி அபாயங்களை விளைவிக்கும். ஆகையால் 5-ம் படையை விளக்கிக்காட்டி, அதன் விபத்துக்களை எச்சரிப்பது இந்தப் பிரஸங்கத்தின் நோக்கமாகும்.

காலாட்படை, கப்பற்படை, விமானப்படை, பிரசாரப்படை, முதல் நான்கு படைகளாகும்; அடுத்துக்கெடுக்கும் துரோகிகள் 5-ம் படையாகும். 5-ம் படையை ஆணித்தரமாக ஜெர்மானியர் அமைத்திருப்பதால் இத்தொடர்மொழி விசேஷமாக இவர்களையே குறிக்கும். ஜெர்மனிக்கு எதிரி நாடுகளில் வசிக்கும் ஜெர்மானியரும், அவர் அபிமானிகளும் இதற்கு அங்கத்தினராவார்கள்.

5-ம் படை என்ற பதம், ஸ்பெயின் உள்நாட்டு யுத்தத்தில் ஜென்ரல் மோலாவினால் உபயோகிக்கப்பட்டது. ஸ்தானிகர்களும், தேசக்காரியஸ்தர்களும் (Consuls)ம் ஒழுங்குதவறிச் செய்த புரட்சிகளிலிருந்தும் ஏற்பட்டிருக்கலாம். ஸ்தானிகர்கள் கௌரவஸ்தர்கள்; இவர்களைச் சோதனை செய்யவோ, கைது செய்யவோ கூடாது; இவர்கள் புகார் செய்தால் தேசங்களுக்குள் மனஸ்தாபங்களேற்படும். ஜெர்மன் தூதர்களும் ஸ்தானிகர்களும் தங்களுக்குள்ள சலுகையை துஷ்பிரயோஜனப்படுத்தி, 5-ம் படை சதிகளை நடத்துகிறார்களென்று நினைக்க ஹேஷ்யங்களிருக்கின்றன. ஜெர்மன் ராஜ்யதந்திரங்களில் இது ஒன்று மிகக் கேவலம்.

5-ம் படை யுத்தத்துக்கு முன்னதாகவே ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடு தீர்க்காலோசனை செய்து, பங்கடவாக அமைக்கப்பட்டது. சர்வாதிகார நாடா; தலால் ஜெர்மனியில் அபிப்பிராய பேதங்கள் கிடையாது. இதர தேசங்களில், கக்ஷிகளுண்டு. கவர்ன்மெண்டல்லது எதிர்க்கக்ஷி—அதாவது, எது தங்களுக்கு தற்சமயத்தில் சாதகமோ—அதோடு 5-ம்படை கலந்துகொள்ளும். உதாரணமாக:— ஸர்வதேச சங்கத்தி (League of Nations)ல் ஜெர்மனி சேரவில்லை; இருந்த போதிலும் அது கூடும் ஜெனீவா (Geneva) நகரத்துக்கு அதன் 5-ம் படைக்காரர்கள் சென்று சங்கத்தின் அங்கத்தினர்களைக் கலைத்தார்கள். இதே மாதிரியாக லொகார்னோ (Locarno) உடன்படிக்கைக் காலத்தில் அங்கு சென்று வம்பு செய்தார்கள். எந்த தேசத்தில் பொதுஜனத்தேருதல் (General Election) நடந்தாலும் சரி, மந்திரிகள் மாறினாலும் சரி, பொருளாதாரக் கொள்கைகள்

திருப்பி அமைத்தாலும் சரி இவர்கள் அங்கு, அப்பொழுது தலையிட்டுக்கொள்வார்கள். ஸமஸ்தானங்களுக்குள் மனத்தாங்கலேற்படும் போதும் இவர்கள் சூழ்ச்சி கட்டாயமாயேற்படும். உதாரணமாக, 'மஞ்சுகோவா அந்தஸ்து', 'ரஷியாவில் நடந்த பிரிடிஷ் இஞ்சினியர்கள் விசாரணை', பல தேசக் குடியேற்ற நாட்டு (International Settlements) வியவகாரங்கள் ஏற்பட்டபோது, வம்பு ஸ்தலங்களிலும், அதையொட்டிய ஐரோப்பிய நாடுகளிலும் 5-ம் படைக்காரர்கள் சூழ்ச்சி செய்தார்கள். தேச ஸ்தானிகர்கள், அவர்களுடைய பரிவாரங்கள் (attaches), பத்திராதிபர்கள், முதலாளிகள், யுத்த தளவாட தொழிற்சாலைக்காரர்கள், ராஜ்ய தந்திரிகள் எவர்களையும், போஜனசாலை முதலிய பொது ஸ்தலங்களில் சிநேகம் செய்துகொண்டு, அவர்களுக்கு ஹிதமான யோசனை சொல்வதுபோல நடித்து, ஆனால் வாஸ்தவத்தில், ஜெர்மன் ரகஸ்ய அதிகாரிகள் சொன்னபடி, ஜெர்மனிக்குச் சாதகமான வழிகளில், இதர தேசங்கள் இறங்க ஏற்பாடு செய்து விடுவார்கள். ரகஸ்ய இலாகா உத்தியோகஸ்தர்களையெல்லாம் ஏமாற்றி விடுவார்கள். ஒழுங்கு தவறாத ஸ்தானிகர்களைக்கூட ஒழுங்கு தவறும்படி செய்து விடுவார்கள். 'சமாதானம்', 'முன்னேற்றம்' இவைகளுக்குப் பாடுபடுகிற தேசாபிமானிகளை ஏய்த்து விடுவார்கள். இவர்கள் வலையில் அகப்பட்டுக்கொண்டு, தெரியாத்தனமாக ஜெர்மனிக்கு உதவி செய்து விட்டோமேயென்று இவர்கள் தெரிந்த பிறகு வருந்தியிருக்கிறார்கள்.

சமாதானகாலத்தில் முன்னேற்றத்துக்கான இயக்கங்கள் பல உண்டு; அவைகள் வெளிப்பார்வைக்கு, வம்பில்லாத கொள்கைகளாகவும் தோன்றும். இவைகளில் தேசாபிமான இயக்கம் ஒன்று. ஜெர்மானியர் இதைச் சாமர்த்தியமாகத் தங்களுடைய காரியத்தைச் சாதித்துக்கொள்ள உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். 'தேசாபிமானம் அநியாயமோ?' என்பார்கள். 'இல்லை' என்றால், 'எங்களுக்குமட்டும் தாய்நாடு வேண்டாமா? நாங்கள் ஜீவிக்க உலகத்தில் ஒரு மூலைகிடையாதா? ஏதோ ஒருகாலத்தில் ஒரு தேசம் (பிரான்ஸ், பிரிடன்) எங்களைத் தோற்கடித்திருந்தாலென்ன; மறுபடியும், இளம்பிராயத்திலிருக்கும் எங்கள் தேசம் புனருத்தாரணமாக வேண்டாமா? எங்களுக்குப் பௌருஷமில்லையா? கீர்த்திபெற்ற பாவலர்களும், பாடகர்களும், பௌதிக சாஸ்திரக்காரர்களும், யந்திர நிர்மாண சிருஷ்டிகர்த்தாக்களும் எங்கள் நாட்டில் அவதரிக்கவில்லையா? எங்களைப்போல் தைர்யமும், விடாமுயற்சியும் யாருக்குண்டு? ஒரு முறை தோற்றாலும், வலிமையைத் திரும்ப சம்பாதிக்கமுடியாதா? 'வாலிபர் இயக்கம்', 'ஆனந்தமூல்யமாய் வலிமை' என்ற இயக்கங்களை எவ்வளவு புகழ்பெற நடத்தி வருகிறோம்; பிற்போக்கானவர்களான முதலாளிகளையும், யூதர்களையும் ஒங்கி அடித்து, பொதுஜன க்ஷேமத்துக்காக, புனிதமான தர்மங்களைப் பிரகடனம் செய்ய ஹிட்லரும், முஸோலினியும் உலகத்துக்கு வேண்டாமா?' என்று பலவாறாகப் பேசி, மனதைக்கலைத்து விடுவார்கள்.

சுமார் 10 வருஷங்களாக இந்த இயக்கம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடந்து வந்தது; தலைக்குக்கொள்ளியென்று தெரியவில்லை. இங்கிலாந்தில் ஸர் ஆஸ்வால்ட் மாஸ்லி (Sir Oswald Mosley)யும், அவருடைய பாஸிஸ்ட் (Fascist)

சங்கமும், பெல்ஜியத்தில் டெலாக்ரோலு(Delagrolle)ம், அவருடைய ரெக்ஸிஸ்ட் (Rexist) கக்ஷியும், ஸ்பெயினில் ப்ரான்கோ (Franco)வும், அவருடைய பலான்ஜிஸ்ட் (Falangists) கக்ஷியும் இதைச்சேர்ந்தவர்கள். இவர்களும், இவர்கள் சங்கங்களும் உத்தியோக முறையில் அங்கீகரிக்கப்பட்டு, கல்லூரிகளிலும் பிரஸ் தாபிக்கப்பட்டு வந்தன. ஆயிரக்கணக்கான நகரங்களில், புதுப்பத்திரிகைகள் கிளம்பி, தடையின்றி இவ்வியக்கங்களைப் பிரசாரம் செய்தன. முடிந்த இடங்களில் ஸங்கீதசபைகளென்றும், தேகப்பயிற்சிசாலைகளென்றும், பொதுஜன சமாஜங்கள் என்றும் ஜெர்மானியர்களமைத்துக்கொண்டு ஸங்கீதம், தேகப்பயிற்சி போன்ற தீங்கற்ற காரியங்களைச் செய்வதுபோல நடித்து, ரகஸ்யமாய்த் தங்கள் சொந்தப் பிரசாரங்களைச் செய்து வந்தார்கள்.

இதோடு ஜெர்மானியர்கள் வியாபாரத்தில் ஸரஸிகள். ஜெர்மன் காரியஸ்தர்கள் (Consuls) பெரிய வியாபாரங்களில் முதலாளிகளுக்குச் சகாயம் செய்து தயவைச் சம்பாதித்துக்கொண்டார்கள். அநேகப் பெரிய தேசங்களில், பெரிய வேலைகள் செய்ய ஜெர்மன் இஞ்ஜினியர்களும், மின்சார நிபுணர்களும் அமர்ந்துகொண்டு அவர்களுடைய செல்வாக்கை உபயோகித்தார்கள். சிறு தேசங்களுக்கு ஜெர்மன் வியாபாரிகளைத்தான் தெரியும். இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரவேசித்து வியாபாரத்தையெல்லாம் கைப்பற்றிக்கொண்டார்கள். இவர்களுக்கு செல்வாக்கு அதிகமாய் விட்டது; சூழ்ச்சி செய்தார்கள்; இதைத் தெரிந்து புகார் செய்தவர்களை வியாபாரத்தில் பொருமைகொண்டு புகார்செய்வதாகச் சொல்லிவிட்டார்கள்.

இவ்விதங்களில் ஜெர்மானியருக்கு ஜீவிக்க உலகத்தில் இடம் வேண்டும் என்கிற இயக்கம் பலப்பட்டது. இதன் பிறகு ஜெர்மானியர்களுக்குக் குடியேற்ற நாடுகள் வேண்டுமென்ற இயக்கம் ஆரம்பித்தது. இவைகளெல்லாம் இதர பெரிய தேசங்களிலுள்ள ராஜீய நிபுணர்களுக்குத் தெரியாமலில்லை. ஆனால் சில வருஷங்களாகத்தான் இதற்காக ஜெர்மனியில் பிரத்தியேகமாக பிரசாரத்துக்கென்றே ரகஸ்ய இலாகா ஏற்படுத்தப்பட்டு, சமர்த்தர்கள் இயக்கங்களை அமைத்து, அவைகளின்கீழ், பல தேசங்களில் மேற்சொன்னபடி கையாட்கள் வேலைசெய்வது வெளிக்கு வந்தது.

இந்த ஏற்பாடுகளின் ரந்திரம் வெளிவருமுன் ஹிட்லரும், முஸோலினியும் தங்களுக்கு வேண்டிய அநேக காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள். சில வருஷங்களாக டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் தேசங்களில் அரசியல் குழப்பமதிகம். வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவை ராஜாங்கம் மாறும். 'குடி ஆதிபத்தியம்', (Sovietism) 'குடியரசு', 'ஜனசமானத்துவம்' (Socialism) முதலிய புது இயக்கங்கள் ஏற்பட்டு முதலாளிகளுக்குப் பயத்தை உண்டாக்கி விட்டது. இவர்களும், மற்ற அந்தஸ்துள்ளவர்களும், தங்களுடைய செல்வாக்குப் போய்விடுமென்று ஹிட்லர், முஸோலினியைப்போல தங்கள் கக்ஷியைப் பலப்படுத்திக்கொண்டு, அடக்கி ஆளும் முறையைக் கையாட ஆரம்பித்து விட்டார்கள்.

அமெரிக்காவிலும், 5-ம் படைக்கு வேண்டிய ஸாதனங்களிருந்தன. முதலாவது, கோடிக்கணக்காக ஜெர்மானியர்கள் அங்கே வசிக்கிறார்கள். அமெரிக்காவிலும் அநேக கக்ஷிகள் உண்டு. புது பிரெஸிடெண்டு பொறுக்கும் சமயம் நெருங்கிவிட்டது. 'ரூஸ்வெல்டை மூன்றும் முறை பிரெஸிடெண்டாக நியமிப்பதா இல்லையா?' 'குடியரசா, ஜனநாயகமா?' 'ஐரோப்பிய வியவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளலாமா, கூடாதா?' 'ஜனநாயகம்தான் புனிதமானதா, இல்லையா?' என்ற பல குழப்பங்களுக்கிடையே ஜெர்மன் 5-ம் படைக்காரர்கள் சுயநலத்தைத் தேடிக்கொண்டார்கள்.

இவர்கள் ஹிட்லரைப்பற்றியாவது, அவருடைய அரசாங்க முறையைப் பற்றியாவது பஹிரங்கமாகப் புகழ்வதில்லை: அப்படிப் பேசியிருந்தால் இவர்கள் சூழ்ச்சி உடனே வெளியாயிருக்கும். ஜெர்மனியின் நேயக்கக்ஷி எது என்று ஜெர்மன் ரகஸ்ய உத்தரவுகளால் தெரிந்துகொண்டு, அந்தக்கக்ஷியின் சார்பாகப் பேசுவதினாலும், பத்திரிகைகளில் எழுதுவதினாலும், தேர்தல் (Election) காலங்களில் அவர்களுக்குத் தங்களுடைய வோட்டுகளைச் சமர்ப்பித்தும் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்வார்கள். உதாரணமாக, பிரான்ஸில் லீயான் ப்ளம் (Leon Blum) தலைமை வகித்த ஜனசமத்துவ (Socialist) கக்ஷியொன்றுண்டு. கிராக்ஸடி பெவ் (Croix de Fev) என்பது இதற்கு எதிர்க்கக்ஷி. இதில் பிரபுக்கள், காசுக்கடை (Bankers) க்காரர்கள், '500 குடும்பங்கள் (500 fannies)' என்ற செல்வாக்காளர்கள், ப்ளாண்டின் (Flandins), லவால் (Laval), பிதேன் (Petain) எம்-சியாப்பே (போலீஸ் தலைவர்) இவர்களை பின்பற்றியவர்கள் சேர்ந்தார்கள். இந்தக் கக்ஷியை ஜெர்மனி ஆதரித்தது.

பெல்ஜியத்திலும் இந்தக் கதைதான். பெல்ஜியத்தரசர் சிறு பிள்ளை. இவருக்கு விசால நோக்கம் கிடையாது; டிலாக்ரோல் (Delagrolle) என்பவர் ராஜீய (Rexist) கக்ஷியொன்றை உண்டாக்கி, சென்ற யுத்தத்தில் செய்த உடன்படிக்கைகளை ரத்து செய்தார். ஜனநாயக கக்ஷியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும், அரண்மனை சிப்பந்திகளும், அலக்ஷியம் செய்யப்பட்டார்கள். ஜெர்மனியைப்போல சர்வாதிகாரம் செலுத்தவேண்டுமென்ற கற்பனை அரசருக்கு வந்துவிட்டது. இனி யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்றும், சுயாதிகாரியாய்ப் போய்விட வேண்டுமென்றும் பெல்ஜியத்து அரசருக்கு ஆசையும் ஏற்பட்டது. இதைப் பிரசாரம் செய்ய 9 புதிய பத்திரிகைகள் கிளம்பின. இதற்கெல்லாம் ஜெர்மன் பணம் உதவிற்று. ஜெர்மன் 5-ம் படைக்காரர்கள் ரகஸியமாய்ச் சூழ்ச்சி செய்து எக்களித்தார்கள். சென்ற யுத்தத்தில் 'ஆக்டிவிஸ்ட்' கக்ஷியைச்சேர்ந்து, ஜெர்மனியின் சம்பளக்காரர்களாயிருந்தவர்கள் இப்பொழுது பெல்ஜியத்தில் உயர்தர உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். ஹாலண்டு கவர்ன்மெண்டால் துரோகி என்று கண்டிக்கப்பட்டு, பிறகு மன்னிக்கப்பட்ட டாக்டர் பார்ம்ஸ் என்பவர் சமீபத்தில் ஆன்ட்வர்ப் ஸதஸ் ஒன்றில் அக்கிராஸனம் வகித்தார்,

யுத்தம் நேரிட்டால் அமெரிக்கா இங்கிலாந்தோடு சேரக்கூடாதென்று ஒரு இயக்கத்தைக் கிளப்பி அதற்கு கோடி கோடி பணத்தைச் செலவுசெய்து அங்கு வசிக்கும் கோடி கோடி ஜெர்மானியர்களும், அவர் அனுதாபகர்களும் இயக்கத்தை

நடத்திவந்தார்கள். அதன் பயனாக இப்பொழுது நடக்கும் யுத்தம் இங்கிலாந்தின் க்ஷேமத்துக்கு மட்டுமல்லாது அமெரிக்காவுடைய க்ஷேமத்துக்கும் என்ற மனப்பான்மை ஏற்பட ஒரு வருஷமாய்விட்டது. இப்பொழுதுதான் உண்மை வெளிப்பட்டு நம்முடைய கக்ஷியின் நியாயத்தை ஒப்புக்கொண்டு நமக்கு யுத்த தளவாடங்கள் அனுப்பி உதவுகிறார்கள்.

ஆனால், 5-ம் படையில் சிக்கியவர்களெல்லோரும் ராஜ்ய துரோகிகள் என்று சொல்வதற்கில்லை; ஸகஜமாக இவர்கள் ஏமாந்தவர்கள்தான். இக்காலத்தில் கக்ஷிகள் பெருத்துவிட்டபடியால், தங்கள் கக்ஷி வலுக்கவும், எதிர்க்கக்ஷியை முறியடிக்கவும்தான் இவர்கள் பிரயத்தனம் செய்தார்கள். இதற்காக ஜெர்மானியரின் வார்த்தையைக்கேட்டு ஜனத்தலைவர்கள் ஒலிபரப்பினார்கள்; கல்லூரி உபாத்தியாயர்கள் பிரசங்கங்கள் செய்தார்கள்; பாதிரிகள் உபதேசம் செய்தார்கள்; பத்திரிகைகள் எழுதின; முதலாளிகள் தொழிற்சாலைகளை மூடினார்கள்; தேத்தண்ணீர்க் கடைகள், போஜனசாலைகள், அழகு அறைகள் (Beauty parlours) எல்லாம் உதவின.

சில சமயங்களில், உலகமே திடுக்கிடக்கூடிய அட்டூழியங்களை ஜெர்மனி செய்யும். நூற்றுக்கணக்கான யூதர்களை சம்ஹாரம் செய்யும். ஸெகோ—ஸ்லவோகியா (Czecho-Slovakia) அல்லது ஸுடெடன்லாண்ட் (Sudetan Land) போன்ற சிறு தேசங்களைப் பிடித்துக்கொள்ளும். கேட்டால், அதற்குத் தக்க தத்துவங்கள் பேசும். 'எல்லா ஜெர்மானியர்களையும் ஒன்று சேர்க்கவேண்டாமா?' 'ஜீவிக்க எங்களுக்கு வாசஸ்தலம் வேண்டாமா?' 'காரியார்த்தமாக உண்டாக்கிய சிறு தேசங்கள் வம்பு செய்துகொண்டு ஏன் இருக்கவேண்டும்?' 'நமக்கிருக்கும் வம்பு போதாதென்று பிறர் வம்பெல்லாம் இழுக்கிறீர்கள்?' என்று பலவாரான கொண்டிக்கக்ஷிகள் பேசும்.

இப்பொழுது நடக்கும் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் எதிர்பாராத சம்பவங்கள் சில ஏற்பட்டன. வியாபாரக் கப்பல்கள் திடீரென்று நெருப்புப் பிடித்துக் கொள்ளும்; பிரிடனுக்காக சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வெடி விபத்து உண்டாகும்; பிரிடன், பிரிடிஷ் ஜனங்கள், பிரிடிஷ் அரசியல், சட்டம், நோக்கம் இவைகளை தூஷித்து திடீரென்று ஒரு பெரிய பத்திரிகை எழுத ஆரம்பிக்கும். ராஜாங்க தஸ்தாவேஜீ ஒன்று பிரிடிஷ் ஸ்தானிக ஆபீஸ், அல்லது உத்தியோகஸ்தரொருவர் சவாரி செய்த மோடாரிலிருந்து அகப்பட்டதாக பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்படும்—எல்லாம் 5-ம் படை சூழ்ச்சிதான். சென்ற மாதம், யுனைடெட் ஸ்டேட்ஸ் பலவந்தத்தால் உருக்குவேயில் ஜெர்மானியரால் உண்டாக்கப்பட்ட அரசியல் கலகம் அடக்கப்பட்டது. சமீபத்தில் ஜெர்மன் ஸ்காடா விமானக் கம்பெனியால் பனாமா கால்வாய்க்கு அபாயம் என்று பத்திரிகைகள் முறையிட்டு க்ம்பெனியை கொலம்பியா ஸமஸ்தானம் விலைக்கு வாங்கிக்கொண்டது. விசாரணை செய்ததில் அந்தக் கம்பெனியில் வேலைக்காரர்களாயிருந்த ஜெர்மானியர்கள் குற்றவாளிகளெனத் தெரிந்து

வேலையிலிருந்து தள்ளப்பட்டார்கள். மன்ரோ கொள்கைக்குள் அடங்கிய நாடுகளில் நடக்கும் 5-ம் படை சூழ்ச்சிகள் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு இப்பொழுதுதான் வெளிப்படுகின்றன.

யுத்தகாலமாகிய தற்சமயத்தில் இந்தியாவில் காங்கிரஸ் மனஸ்தாபம், தொழிலாளர் கலகம், காக்ஸார் இயக்கம், எல்லைப்புறத்தொல்லை—இவைகளின் மூல்யமாய், வம்புசெய்ய சர்வாதிகாரிகளின் முயற்சி ஏதாவதிருக்கலாம். 5-ம் படை கோழ் சொல்லுவதற்கும், அடுத்துக் கெடுப்பதற்குமட்டுமல்ல, ஒரு தேச மனோபாவத்தையே மாற்றிவிடும். இதின் விவரம் இதோடு சேர்த்து அச்சிட்டிருக்கும் அனுபந்தங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இந்நிலைய அறிக்கைகளையும், இதர பத்திரிகைகளையும் படிப்பவர்களுக்கு இது தெரியும். இந்த இயக்கங்கள் சிலவற்றில் 5-ம் படை நேர்சம்பந்தமும் சற்று இருக்கலாம் காங்கிரஸ் அபிப்பிராயங்கள் தப்பாக வியாக்யானம் செய்யப்படுகின்றன. ஆனால் இப்பொய்ப் பிரசாரத்துக்குத் தப்பி இந்தியா உஷாராய்விட்டது. காங்கிரஸில் ஒரு சிறு கக்ஷியைத் தவிர மற்றெல்லோரும் ஹிட்லரை எதிர்க்கிறார்கள். 5-ம் படையால் ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸில் ஏற்பட்ட அனர்த்தம், இந்த அறிக்கையில் அச்சிட்டிருக்கும் அனுபந்தத்திலிருந்து புலப்படும்.

அனுபந்தத்தில் குறித்திருக்கும் 4-ம் வகுப்புத்தான் 5-ம் படைக்குள் வெகு மோசமானது. பத்திரங்களைப் பணமாக்கிக்கொண்டு, நேயர்களுக்கும் இந்த யுக்தியைப் போதிப்பவர்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களால் 40 கோடி ரூபாய் பதுக்கப்பட்டு ரூபாய் நோட்டுகளடிக்கும்படியாய்விட்டது. நோட்டை மாற்றி வெள்ளிக்கட்டி வாங்குகிறவர்களும், விலையைத் தூக்கி லாபமடிக்கிற வியாபாரிகளும், கவர்ன்மெண்டைத் தூஷித்து, கவர்ன்மெண்டு பிரயத்தினங்களுக்குக் கட்டை போடுகிறவர்களும், சுயப்பெருமைக்காக கக்ஷிகள் கட்டுகிறவர்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும், இதர 5-ம் படைக்காரர்களுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. இவர்களை சிநேகிக்காது, இவர்கள் வார்த்தைகளைக் காதில் போட்டுக்கொள்ளாது, அவர்கள் நடத்தையை அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிடவேண்டும். இதைச் செய்துவிட்டு, நம்முடைய அலுவல்களை வழக்கம்போல் நடத்திக்கொண்டு போகவேண்டும்.

வார யுத்தச் செய்திகள்.

(14—8—40 லிருந்து 21—8—40 வரை).

பிரிடன் மேல் விமானப்படை.—இந்த வாரத்தில், அதிலும் விசேஷமாக வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை தினங்களில் 800 லிருந்து 1000 விமானங்கள்வரை இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென்மேற்குப் பாகங்களையும், கிராய்டன் விமான நிலயத்தையும், லண்டன் வெளிப்புற கிராமங்கள் இரண்டொன்றையும் தாக்கின. ஜெயித்து, சமாதானம்பேச ஹிட்லர் நிச்சயித்திருந்த ஆகஸ்ட் 15-ம் தேதி ஹிட்லருக்கு விநாசகாலமாய் முடிந்தது. அன்று ஜெர்மன் விமானங்கள் அபரிமிதமாகச் சேதமாயின. இந்த வார விமானப்போரில், பிரிடன் வெற்றியடைந்தது. கீழ்க்கண்ட எண்ணிக்கையிலிருந்து எதிரியின் அகோர சேதம் வெளிப்படும்:—

தேதி.		ஜெர்மன் விமான நஷ்டம்.
ஆகஸ்டு 8	...	60
,, 11	...	65
,, 12	...	60
,, 13	...	78
,, 14	...	30
,, 15	...	180
,, 16	...	75
,, 18	...	152
,, 19	...	5
ஆக மொத்தம்	...	705

இதைத் தவிர வேறு பல விமானங்களும் போயிருக்கலாம். மேல் கொடுத்த கணக்கு ஜாக்கிரதையாய் தணிக்கை செய்யப்பட்டது. ஜெர்மன் விமானம் நஷ்டத்தைத் தெரிவிக்கும்இங்கிலீஷ் விமானிகள், உண்மையென்று சத்தியம்செய்ய வேண்டும். உண்மைதானவென்று மேலதிகாரிகள் கேள்வி கேட்டு நிச்சயம் செய்துகொள்ளுவார்கள்; மற்ருெரு சாக்ஷியும் ஊர்ஜிதப்படுத்தவேண்டும்.

விமான எதிர்ப்பால் பிரிட்டிஷார்களுடைய மனம் சற்றுக்கூட தளரவில்லை என்பது ஹிட்லருக்கு இப்பொழுது நன்ருய் தெரிந்திருக்கும். இங்கிலீஷ்காரர்கள் பயப்படவில்லை. ஜெயித்த மனப்பான்மையுடன் தைரியமாயிருக்கிருர்கள்.

இந்த வாரத்திய விமானப்போர் விவரங்கள் இந்த அறிக்கையின் இறுதியில் பார்க்கலாம். எதிரி நாடுகளில் நடந்த இங்கிலிஷ் விமான எதிர்ப்புகளும் அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ப்ரான்ஸ்.—உடன்படிக்கைப்படி விஷி கவர்ன்மெண்டு பாரிஸுக்கு இன்னும் மாற்றப்படவில்லை. இதைவிட முக்கியமானது ப்ரான்ஸின் பஞ்சம். 13-ம் தேதி ஒலிபரப்பில் மார்ஷல் பிதேன் உணவில்லாத கஷ்டத்தை விவரித்துப் புலம்பி இருக்கிறார். பிரிடிஷார் போட்டிருக்கும் முற்றுகையைச் சற்று விலக்கி, உணவுப் பொருள்களை பிரான்ஸுக்கு வரச்செய்ய மிஸ்டர் ஹூவர் சொன்ன யோசனையை இங்கிலாந்து நிராகரித்துவிட்டது. மனமிரங்கி உணவை அனுப்பினால் அதை பிரான்ஸினிடமிருந்து ஜெர்மானியர் பிடுங்கிக்கொண்டு, தாங்கள் சாப்பிட்டுவிட்டு, அதிலிருந்து யுத்த தளவாடமும் செய்து விடுவார்கள். ஹிட்லர்தான் போதிய உணவு தன்னிடமிருப்பதாகச் சொல்லியிருக்கிறாரே. முடிந்தால் பிரான்ஸ் முதலிய பிடித்த நாடுகளின் கஷ்டத்தை ஹிட்லர் நிவர்த்திக்கட்டுமென்று சொல்லி இங்கிலாந்து முற்றுகையைத் தளர்த்த மறுத்துவிட்டது.

இதாலி.—டாவுட் ஹேகியா என்ற அல்பேனிய குற்றவாளியொருவன் சமீபத்தில் கொலைசெய்யப்பட்டான். இவன் ஒரு பெரிய தேசாபிமானியென்றும், இவனை வேணுமென்றே க்ரேக்கியர்கள் கொன்றதாக இதாலி பழி சுமத்திற்று. ஹெய்லி என்ற கிரேக்கிய யுத்தக் கப்பல், அஸம்ப்ஷன் திருநாளுக்காக அலங்கரிக்கப்பட்டு துறைமுகத்தில் நின்ற சமயத்தில் வெடிகுண்டால் உடைக்கப்பட்டது. டைனாஸ் துறைமுகத்திலிருந்து பிரியூஸ் துறைமுகத்துக்குப் போகும் காயப்பட்டவர்கள் பேரிலும், புண்ய க்ஷேத்திர தரிசனத்திலிருந்து திரும்பும் யாத்திரைக்காரர்கள் பேரிலும் 24 வெடிகுண்டுகள் போடப்பட்டன. இதெல்லாம், டாவுட் ஹேகியா கொலைக்கு பழிக்குப்பழியென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ருமேனியா.—தன்னுடைய 4 ஜில்லாக்களை ஹங்கேரிக்கும், தென் டாப்ருஜாவை பல்கேரியாவுக்கும் கொடுத்துவிட ருமேனியா சம்மதித்துவிட்டது. இது சம்மந்தமான பேச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

நடுக்கீழ் நாடுகள்.—கபூஸியோ கோட்டையை இதாலியர் காலி செய்து விட்டார்கள். பிரிடிஷ் ஸொமாலிலாண்டை பிரிடிஷார் காலி செய்துவிட்டார்கள்.

அமேரிக்கா.—யுனைடெட் ஸ்டேட்ஸ், கானடா தேசங்களுடைய கடல், நில தற்காப்பு விஷயங்களை ஆலோசனை செய்ய இவ்விரண்டு தேசங்களும் சேர்ந்த ஸபை (Board) ஒன்று ஸ்தாபிக்கப்படும். நியூபவுந்திலாந்திலும், வெஸ்டு இண்டீஸிலும் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பல் படைகள் நிறுத்த 99-வருஷ குத்தகைக்கு சிலவிடங்கள் விட்டுக்கொடுக்க யோசனைகள் நடக்கின்றன.

கடல் யுத்தம்.—ஆகஸ்ட் முதல் தேதி முதல் எல்லா வியாபாரக் கப்பல்களும் இங்கிலாந்திடமிருந்து அனுமதிச் சீட்டுகள் பெறவேண்டுமென்று போட்ட உத்தரவு ஞாபகமிருக்கலாம். முதல் வாரத்தைக்காட்டிலும் இரண்டாம் வாரத்தில் அரைப் பங்கதிகமாக, சீட்டுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. கள்ள வியாபாரச் சரக்குகள் பிடிபட்ட கணக்கு :—இதாலிக் கப்பல்களிலிருந்து 107,000 டன்; நடுநிலைமைநாட்டுக் கப்பல்களிலிருந்து 346,000 டன்—மொத்தம் 453,000 டன்.

பிரிடிஷ் யுத்த, வியாபாரக் கப்பல்கள் அதிக சேதம் அடைந்து விட்டதாக ஜெர்மானியர் கொடுக்கும் கணக்கெல்லாம் தப்பென்று பிரிடிஷ் கடல் படை இலாகா 16-ம் தேதி விடுத்த அறிக்கை யொன்று பின் வருமாறு தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது.

"நம்மிடத்திலிருந்த கப்பல்களைவிட அதிகமாகவே உடைந்து விட்டதாக எதிரி சொல்லுகிறான். உதாரணமாக :—

(1) நம்மிடத்தில் 15 யுத்தக் கப்பல்களுண்டு: 32 யுத்தக்கப்பல்களை உடைத்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

(2) 50 லக்ஷம் டன் வியாபாரக்கப்பல்களை உடைத்ததாகச் சொல்லப் படுகிறது: ஆனால் நம்மிடம் இருந்ததே 25 லக்ஷம்தான்.

(3) பெரிய யுத்தக்கப்பல் ஒன்றுதான் சேதம்: 32 போய் விட்டதாகப் பொய்க் கணக்கு.

(4) விமானங்களேற்றிச் செல்லும் கப்பல்களிரண்டு சேதம்: 10 என்று பொய்க் கணக்கு.

(5) குரூஸர் கப்பல் 3-ம், டெஸ்டிராயர் கப்பல் 28-ம், ஸப்மாரின் கப்பல் 13-ம் சேதம். குரூஸர் சேதம் 83 என்றும், டெஸ்டிராய்ர் சேதம் 92 என்றும் ஸப்மாரின் கப்பல் 52 என்றும் சொல்லப்படுகிறது.

(6) மேற்சொன்ன தொகைகள் முழுச் சேதமான கப்பல்களைக் குறிப்ப தாகவும், இதைச் சேராத வேறு 300 கப்பல்கள் பழுதாய்ப் போய்விட்டன என்றும் சொல்லப்படுகிறது: இதெல்லாம் மிதமிஞ்சிய பொய்யாகும்.

(7) எதிரி கணக்கு வீதம் ஆகஸ்ட் வரையில் 5,076,088 டன் பிரிடிஷ் நேயக் கப்பல்கள் உடைத்தாய்விட்டதாம். உண்மைக்கணக்குப்படி எதிரியாலுடை பட்டது இதில் பாதிதான்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
12—8—40. (திங்கட்கிழமை).			
	பகலில்.—விமான நிலயங்கள்.—வால்ஹாவன் (Waalhaven), ஹிங்கின் (Hingene), கேயன் (Caen), செர்பரோ (Cherbourg), மொராலே (Moralaix).	12 விமானங்கள்.	பெரிய வெடிச் சத்தம்.
	துறைமுகம்.—ஹெல்டர் (Helder).		
	கடல் விமான நிலயம்.—பிரஸ்ட் (Brest).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
12—8—40 (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—விமான நிலயங்கள்.-லாஸ்டிரப் (Lastrup), போர்கும் (Borkum), டினார்டு (Dinard), ஷீபால் (Schipol), டெக்ஸல் (Texel) தீவு. (பிரிடிஷ் விமானங்கள் ஜட்லண்டி (Jutland) லிருந்து பிஸ்கே (Biscay) விரிகுடா வரையில் படையெடுத்தன).	......	கட்டடங்கள் தீக்கு இரையாகியது.
	கோதா (Gotha) விமான உற்பத்திசாலை.		
	கப்பல் நிற்கும் இடங்கள்.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).		
	வெடிமருந்து செய்யுமிடங்கள்.-லிப்ஸ்டாட் (Lippstadt), ஹெர்லிங்கன் (Herlingen).	4 விமானங்கள்.	தீப்பிடித்தது.
	உலை.—விட்டன் (Witten).		
13—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	இரவில்.—ஜங்கர்ஸ் (Jnnkers) விமான உற்பத்தி சாலை —டெஸ்ஸா (Dessau), பெர்ன்பர்க் (Bernburg).		
	வெடி மருந்து ஆலை.— லூனன் (Lunen), கிரேவன்பிராட்ச் (Gravenbrotch).		
	ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—டூயிபர்க் (Duisberg), கிரபெல்டு (Krefeld).		
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—ரூர் (Ruhr).		
	14 விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஹாலண்ட் (Holland), பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).	1 விமானம்.	
	விமான உற்பத்தி சாலைகள்.—மிலானில் (Milan) இருக்கும் காப்ரோனி (Capproni) தொழிற்சாலை, டூரினிலிருக்கும் (Turin) பியட் (Fiat) தொழிற்சாலை.	1 விமானம்.	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
14—8—40. (புதன்கிழமை).			
	எண்ணெய்க்கிடங்குகள், எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—*ம்லாயி* (Mlaye), *பாயில்லாக்* (Pauillac), ஆம்பீஸ் (Ambes).	......	தீப்பிடித்தது.
	எண்ணெய்த் தொட்டிகள்.—*போர்டோ* (Bordeaux)வுக்கருகேயுள்ள கிரோண்டு (Gironde).	......	எண்ணெய்த் தொட்டிகள் அழிந்தன.
	ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள், மின்சார உற்பத்திசாலை.-கொலோன் (Cologne).		
	எதிரி விமான நிலயங்கள்.—வடபிரான்ஸ் (France).	......	அநேகம் நாசமாயின.
	விமான யுத்தம்.—*ஜெர்மன் கடற்கரை.*	4 விமானங்கள்.	2 விமானங்கள் நஷ்டம், 2 சேதம் ஆயின.
15—8—40. (வியாழக்கிழமை).			
	எண்ணெய் ஆலை.—கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen), *ரீஷால்ஷ்* (Reisholz).		
	வெடி மருந்து ஆலை.—லூனன் (Lunen), *எஸ்ஸன்* (Essen), *க்ளாட்பாக்* (Gladbach), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).		
	கப்பல் நிற்குமிடம்.—*எம்மரிச்* (Emmerich), ஹெல்டர் (Helder).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).		தீப்பற்றியது.
	எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலைகள், எண்ணெய்க் கிடங்குகள்.—ரூர் (Ruhr).		
	குருப் (Krupp) யுத்த தளவாட ஆலை.—எஸ்ஸன் (Essen).		
	விமான நிலயங்கள்.—*பிரான்ஸ்* (France), *ஹாலந்து* (Holland), *ஜெர்மனி* Germany).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்,	எதிரிகளின் நஷ்டம்.
15—8—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	காவல் வேலை.—வடகடல் (North Sea), டூரினிலிருக்கும் பியட் (Fiat) தொழிற்சாலை, மில்லானி (Milan)லிருக்கும் காப்ரோனி (Caproni) விமான உற்பத்திசாலை.	......	அதிகச்சேதம்.
	உலை.—ஜெனோவா (Genoa), போமா (Boma), மகாகா (Macaca), எரிட்ரியா (Eritrea), ஜிக்ஜிகா (Jigjiga), டெஸ்ஸி (Dessie).	நஷ்டமில்லை.	3 கடல் விமானங்கள் நஷ்டம்.
	மோட்டார்கள், ஒட்டகப் படைகள்.—அபிஸீனியா (Abyssinia).		
16—8—40 (வெள்ளிக்கிழமை).			
	இரவில்.—ஜல உற்பத்தி யந்திரம்—லூனா (Luna).		
	பென்ஸீன் (Benzine) சுத்தம் செய்யும் இடம்.—போலன் (Bohlen).		
	ஜீயிஸ் (Zeiss) தொழிற்சாலை.—ஜீனா (Jena).		
	மெஸ்ஸர்ஸ்ஷிமிட் (Messerschmitt) தொழிற்சாலை.—ஆக்பர்க் (Augburg).	......	தீப்பற்றியது. பலத்த சேதம்.
	விமானங்கள்.—வீமாருக் (Weimar)கு வடக்கே.	......	1 சுழல் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.
	ஜங்கர்ஸ் (Junkers) தொழிற்சாலை.—பெர்ன்பர்க் (Bernburg).		
	விமான உற்பத்திசாலை.—பிராங்பர்ட் (Frankfurt).		
	ரயில் பாதைகள்.—(Ruhr).		
	விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.	3 விமானங்கள்	
	விமானந்சுடும் கப்பல்.—ஸ்டவாங்கர் விரிகுடா (Stavanger Fjord).		

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
16—8—40 (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
மோட்டார்கள், துருப்புகள்.—புல்கார் ஜீலா ரோடு (Bulhar-Zeila road), பயோ போகோ ஜீலா ரோடு (Biyo-Fogo-Zeila road), ஜுகாங்கன் பிரதேசம் (Jugangan area).	......	அதிகச்சேதம்.
வேவுபார்த்தல்.—அடாலே (Adaleh), ஓட்வயன் (Oadwein), ஹார்கீஸா (Hargeisa) ஜில்லாக்கள்.	......	லாரிகள் நாசமாயின. அநேக வீடுகள் இடிந்தன.
கடற்படை நிலயம்.—மஸாவா (Massswa).	......	
17—8—40. (சனிக்கிழமை).		
கடல் விமானங்கள், கப்பல்கள்.—புலாயின் (Boulogne) துறைமுகம்.	......	துறைமுகம் பாழாகியது. அநேக கப்பல்கள் கடல் விமானங்கள் நாசமாயின.
எண்ணெய் ஆலைகள், வெடிமருந்து ஆலைகள், விமானங்கள், ரயில் வண்டிகள்—ஜெர்மனி (Germany).		
26 விமான நிலயங்கள்.—வட மேற்கு பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).	நஷ்டமில்லை.	1 சுழல் விமானம்.
காவல் வேலை.—காமரான் (Kamaran) தீவு.		
எதிரி துருப்புகள்.—பிரிடிஷ் ஸோமாலிலாண்ட் (Somaliland).		
18—8—40. (ஞாயிற்றுக்கிழமை).		
இரவில்.—கலேயி (Calais)-க்கும், புலாயினுக் (Boulogne)-கும் நடுவில் உள்ள கடற்கரை: விமான நிலயங்கள்—பிரீபர்க் (Freiburg), ஹாப்ஷீம் (Habsheim).	......	ஜுவாலை எழும்பியது. ஒரு வெடி மருந்துக் கிடங்கு தீப்பற்றியது
தொழிற்சாலை.—ரயின் (Rhine): ஒரு மின் சார ஆலை.		
ரஸாயன ஆலை.—வால்டுஷட் (Waldshut)		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
18—8—40 (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	விமான உற்பத்தி சாலை.—பாட் ரீன்பெல்டன் (Badrheinfeldea).		
	இதாலிய விமான உற்பத்திசாலை,— மிலான் (Milan), டூரின் (Turin), அபிஸீனியாவின் தலைநகரான அடிஸ் அபாபா (Addis Ababa), கஸாலா (Kassala).	நஷ்டமில்லை.	பலத்த சேதம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
13—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	பகலில்.—ஸவுதாம்டன் (Southamton), கென்டிஷ் (Kentish) கடற்கரை இங்கிலீஷ் கால்வாய் (English Channel).	......	முக்கியமான சேதம் ஒன்றும் இல்லை.
	மாலையில்.—ஸவுதாம்டன் (Southamtn), வைட்(Wight) தீவு, பெர்க்ஷயர் (Berkshire) வில்ட்ஷயர் (Wiltshire) இவைகளில் சில ஜில்லாக்கள், தெம்ஸ் (Thames) முகத்துவாரம், இங்கிலாந்தின் தென் கிழக்குக் கடலோரத்தில் உள்ள அநேக விமான நிலயங்கள்.	......	சிலருக்குக் காயம். சிலர் இறந்தனர். அநேக இடங்களில் தீப்பிடித்தது. ஒருவருக்கும் காயம் இல்லை. அநேகருக்குக் காயம். சிலர் மாண்டனர்.
	இரவில்:—இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்குப்பாகங்கள். மிட்லண்ட்ஸ் (Midlands), வேல்ஸ் (Wales), வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), மால்டா (Malta)	78 விமானங்கள்.	சேதமில்லை. ஒரு கட்டடம் இடிந்தது. அநேகருக்குக் காயம். 13 விமானங்கள் அவைகளில் 10 விமானிகள் உயிர் தப்பினர். சொற்ப சேதம். ஒருவருக்குக் காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
14—8—40. (புதன்கிழமை).			
	காலையில்:—டோவரி (Dover)-ல் ஒரு ஆகாயக்கோட்டை பலூன் (Barrage Balloon), ஒரு தீபக்கப்பல் (Light-ship).	......	மூழ்கிற்று.
	பிற்பகலில்.—இங்கிலாந்தின் தென் கிழக்கு, தென்மேற்குப்பாகங்கள், ஸவுதாம்டன் (Southampton), ஹேஸ்டிங்ஸ் (Hastings) **விமான** நிலயங்கள்—கெண்ட் (Kent).	......	நிற்கும் ரயில் தொடர் 1 சேதம் அடைந்தது. சில வீடுகளுக்குச் சேதம்.
	மாலையில்:—தென் மேற்கு இங்கிலாந்து வேல்ஸ் (Wales)	......	பலருக்குக் காயம். ஒருவன் இறந்தான்.
	இரவில்.—வடமேற்கு இங்கிலாந்து, ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்கு, தென் கிழக்குப் பாகங்க்ள்.	31 விமானங்கள்.	சேதமில்லை. 7 விமானங்கள்; 2 விமானிகள் பத்திரமாயிருக்கிறார்கள்.
	ஷாஜிர் (Zajir).		நஷ்டமில்லை.
15—8—40. (வியாழக்கிழமை).			
	காலையில்.—தென்கிழக்குக் கடற்கரையில் பல விமான நிலயங்கள், தென்கிழக்குக் கடற்கரையில், ஒரு பட்டணம், தென் மேற்குக் கடற்கரை.		
	பிற்பகலில்.—டைன்ஸயிடு (Tyneside), ஸண்டர்லாண்டு (Sunderland), வடகிழக்கு இங்கிலாந்தில் சில ஜில்லாக்கள் (இங்கு படையெடுத்தது இதுதான் முதல்தடவை). யார்க்ஷயர் (Yorkshire).	......	சொற்ப சேதம். சிலருக்குக் காயம்.
	மாலையில்.—கிராய்டான் பட்டணமும், அங்கிருக்கும் விமான நிலயமும்.		சில வீடுகளின் மேல் வெடிகுண்டுகள் விழுந்தன. நஷ்டம் அதிகமில்லை. படையெடுத்த எதிரி விமானம் ஒன்று கூடத் தப்பவில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
15—8—40 (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), இங்கிலாந்தின் வடகிழக்கு, வடமேற்குப் பாகங்கள் [இன்றைய படையெடுப்பு சுமார் 500 மைல்கள், ப்ளிமவுத்தி (Plymouth)-லிருந்து டைன் (Tyne)-வரையில் பரவியிருந்தது].	180 விமானங்கள்.	சத்தம் போடும் குண்டுகள் போடப்பட்டன. பலருக்குக் காயம். சிலர் இறந்தனர். 34 விமானங்கள். 17 விமானிகள் உயிர் தப்பினர்.
16—8—40. (வெள்ளிக்கிழமை).			
	காலையில்.—விமான நிலயங்கள் :—இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரை, தெம்ஸ் (Thames) நதி முகத்துவாரத்துக்கருகேயுள்ள டில்பரி (Tilbury), நார்த்பிளீட் (Northfleet).		ஒரு மாதா கோவிலுக்கு சொற்ப சேதம். பலருக்குக் காயம். சிலர் இறந்தனர்.
	பிற்பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம், வைட் (Wight) தீவு.		சொற்ப சேதம்.
	மாலையில்.—ஹெர்ட்போர்டுஷெயர் (Hertfordshire), எஸ்ஸெக்ஸ் (Essex), ஸர்ரே (Surrey), ஹாம்ஷயர் (Hamp shire), ஆக்ஸ்போர்டுஷயர் (Oxfordshire), ஈஸ்ட்போர்ன் (Eastbourne) லண்டன் (London)னுக்கருகேயுள்ள பாகஙகள்.	75 விமானங்கள்.	சேதமில்லை. சிலருக்குக் காயம். சிலர் மாண்டனர். சில வீடுகளுக்குச் சேதம். 22 விமானங்கள், 14 விமானிகள் பத்திரமாயிருக்கிறார்கள்.
	இரவில்.—இங்கிலாந்தின் தென் கிழக்கு, தென்மேற்குப் பாகங்கள்.		சொற்ப சேதம்.
17—8—40. (சனிக்கிழமை).			
	காலையில்.—இங்கிலீஷ் கால்வாய் (English channel).	1 விமானம்.	
	பகலில்.—விமானப் படையெடுப்பே இல்லை.		
	இரவில்.—தென்கிழக்குக் கடலோரத்தில் ஒரு பட்டணம், மிட்லண்ட்ஸ் (Midlands).		சேதமில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
17—8—40 (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	பிரிடிஷ் கடற்படை.—காபுஸ்ஸோ (Capuzzo), கோட்டையைத் தாக்கும் பொழுது பார்டியா (Bardia)வுக்கருகில்.	11 விமானங்கள்.	இதாலியர்கள் கோட்டையை விட்டு வெளியேறினர். கப்பற் படைக்குச் சேதமில்லை.
18—8—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிற்பகலில்.—லண்டனை (London)ச் சுற்றியுள்ள பாகங்கள், தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், ஸர்ரே (Surrey).	......	சில வீடுகளுக்கு சேதம். சிலருக்குக் காயம். சிலர் இறந்தனர்.
	விமான நிலயங்கள், துறைமுகங்கள்.—இங்கிலாந்தின் தெற்கு, தென்கிழக்குப் பாகங்கள்.	152 விமானங்கள்.	முக்கியமான சேதம் ஒன்றுமில்லை.
	இரவில்.—தென் வேல்ஸ் (Wales), இங்கிலாந்து.		சேதமில்லை.
19—8—40. (திங்கட்கிழமை).			
	பகலில்.—எஸ்ஸெக்ஸி (Essex)ல் ஒரு பட்டணம், தென் வேல்ஸி (Wales)ல் ஒரு கிராமம்.		சில வீடுகளுக்கு சொற்ப சேதம்.
	விமான நிலயங்கள்.—இங்கிலாந்து, தென்கிழக்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம் (அங்கங்கே சிறுசிறு படையெடுப்பு).	5 விமானங்கள்.	3 விமானங்கள். 2 விமானிகள் பத்திரம்.
	இரவில்.—வடகிழக்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம், மிட்லண்ட்ஸ் (Midlands).		சேதமில்லை.

அனுபந்தம் I.

5-ம் படை.

அடுத்துக்கெடுப்பவர்கள்.

வேவுகாரர்கள்—பயப்பிரசாரம் செய்பவர்கள்.

வம்புப்பேச்சால் எதிரிக்கேற்படும் சகாயம்.

5-ம் படையில் 5 பிரிவுகளுண்டு :—

முதல் வகுப்பில் உள்ளவர்கள் சம்பளக்காரர்கள். இவர்களை அடிப்படையாகக் கொண்டுதான் 5-ம்படை அமைக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலருக்கு வேவு வேலை; சிலர் ரகஸிய போலீஸ்; சிலர் அடுத்துக்கெடுப்பதற்காக தொழிற்சாலை முதலிய இடங்களில் வேலைக்கு அமர்ந்து கொள்வார்கள்.

இரண்டாவது வகுப்பு குடியேறிய அல்லது அடைக்கலம் புகுந்த ஜெர்மானியர்கள் அடங்கியது; இதில் தனித்த நபர்களும், சங்கங்களுமுண்டு. முதல் வகுப்பைப்போல் இடைவிடாது 5-ம் படைக்காரியத்தில் முயற்சிக்க மாட்டார்கள். சமயம் வந்தபோது காலை வாரிவிடுவார்கள். துரோகம் வெளிப்படையாக ஒன்றும் செய்யாததால் நிரபராதிகளைப் போலிருப்பார்கள்; கண்டு பிடிப்பது கஷ்டம். இவர்களுக்கு இரங்கக்கூடாது. இவர்களை நம்பியே ஹாலண்ட் கெட்டது. இவர்களை சுயேச்சையாக விடவே கூடாது; சந்தேகப்பட்டவர்களாகப் பாவித்து, ருஜுவில்லாவிட்டாலும், குற்றவாளிகளென்று தண்டிப்பதே சரி.

மூன்றவது வகுப்புக்காரர்கள் ஜெர்மானியரல்ல. ஜனநாயக ஆட்சியில் நம்பிக்கையில்லாது, சர்வாதிகார ஆட்சியை ஆதரிக்கும் அமிதவாதிகள். இவர்கள் கிளர்ச்சியால் ஊர் இரண்டுபடுவதால் ஒரே மனதோடு யுத்தத்தை நடத்த முடியாமல் போகிறது. சர்வாதிகாரத்தில் மனிதனுக்கு சுயேச்சையில்லாததால், சுயலாபத்தையும், சுய அதிகாரத்தையும் நாடி, சொந்த சுதந்திரத்தை இழந்து தேசத்தை எதிரிக்கு அடிமையாக்குவார்கள். இவர்கள் சிறுபான்மையோர்தான், சமாதான காலத்தில் உன்மத்தர்களென்று இவர்களை அலக்ஷியம் செய்துவிடலாம்; ஆனல் யுத்த காலத்தில் துரோகிகளென்றே பாவிக்கவேண்டும்.

நான்காவது வகுப்பார்களும் உள்ளூர் பிரஜைகள்தான். 3-ம் வகுப்பைப் பின்பற்றியவர்கள்: சுயேச்சை வியவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளமாட்டார்கள்; ஆனல் இவர்களால் சுதந்திரமழிந்துபோகும். வம்புக்காரர்கள், பயப் பிரசாரகர்கள், கோழைகள், முறுமுறுப்பவர்கள், உலகத்தில் யுத்தமே நடக்கக் கூடாது என்ற சமாதான கக்ஷியார்கள் 4-ம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களும், இவர்களுடைய குடும்பங்களும் பிழைக்க கவர்ன்மெண்டு செய்யும் ஏற்பாடுகளைக் கவனியாமல் பிறகு துன்பம் வந்தால் கவர்ன்மெண்டையே தூஷிப்பார்கள். 5-ம் படையில் இது பெரிய வகுப்பு: இதனல் எதிரிக்கு சகாயம் அதிகம்.

ஐந்தாம் வதுப்பு. இதைச் சேர்ந்தவர்கள் சைன்யத்தில் இல்லாவிட்டாலும், சைன்யத்தைப் பின்பற்றி, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட இடங்களில், திடீரென்று திகிலுண்டாகச் சண்டை செய்து, உடனே வெற்றியோ, நாசமோ அடைவார்கள். இவர்களை, தைர்யமாய் ஊரார்களே எதிர்க்கலாம். சைன்யத்தைக் கொண்டும் விரட்டி விடலாம்.

மேற்சொன்ன மாதிரி 4-வது வகுப்பு மிகப்பெரியது. இதைச் சேர்ந்தவர்களால் அநர்த்தமும் அதிகம். இவர்களைக் கண்டிப்பதும் கஷ்டம்; ஏனெனில் இவர்கள்மேல் சட்டப்படி குற்றமொன்றும் சாட்டமுடியாது. "புது ஆயுதம் எதிரி ரகஸியமாய் வைத்திருக்கிறான்: வந்தது மோசம்." என்று வீடு வீடாய்ச் சொல்லிக்கொண்டு போவார்கள்; அல்லது ஆப்தர்களை தூஷிப்பார்கள். ராஜவிசுவாசிகளெல்லோரும் இவர்களை எதிரியின் சம்பளக்காரர்களென்றும், சிப்பந்திகள் என்றும், துரோகிகளென்றும் மதிக்கவேண்டும்.

அனுபந்தம் II.

ஐந்தாம் படை என்பது என்ன?

இதர தேசங்களிலிருந்து இந்தியாவுக்குப் போதனைகள்.

(அநுமதியின் பேரில் Illustrated Weekly of India விலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டது.).

நார்வே, ஹாலந்து அநுபவத்திலிருந்து 5-ம் படையின் காரியம் தெளிவாகிறது. ஜெர்மனிக்குச் சாதகமாக, பாலங்களை சமயத்திலுடைத்து விடுவதும், தன்னாட்டுச்சைன்யத்தைக் காட்டிக்கொடுத்து விடுவதும், உள்ளூரில் கலகம் விளைவிப்பதும் மட்டும் இதன் வேலையில்லை. ஒரு தேசத்தாருடைய மனோபாவத்தையே மாற்றிவிடுவதுதான் இதனுடைய பெரிய சூழ்ச்சியாகும்.

ஜெர்மனியினிடத்தில் பயமும் விச்வாஸமும் வரச்செய்து, ஜெர்மனியை வெல்ல முடியாதென்ற மனப்பான்மையை உண்டாக்கி, ஜெர்மனி கேட்டதைக்கொடுக்கும்படி மனதைக்கலைத்து மழுங்கச்செய்வதே இதன் முக்கிய காரியமாகும். இவ்விதமாகத் தான் நார்வே செயலற்று மயங்கி ஜெர்மனிக்கு இரையாயிற்று.

இந்த வசியத்துக்கு 5-ம் படையில் நியமித்திருக்கும் சில ஏவலாளர்கள் மட்டும் போதாது. தேசத்தலைவர்கள் பலர் இவ்வலைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டும். ஜெர்மனியின் சர்வாதிகார பிரதாபங்களை ஏவலாளர்கள் நேரில் சொல்லமாட்டார்கள். உள்ளூர் வாசிகளைக்கொண்டு எதிர் பார்க்காதவிடங்களிலெல்லாம் பிரசாரம் செய்து, ஜெர்மன் அரசாட்சி பாஷாணத்தை உட்கொள்ளச் செய்து விடுவார்கள்.

ஜெர்மன் ரகஸிய ஏவலாளர் கூட்டத்துக்கு அனுதாபம் காட்டி, தேசத்தை சுலபமாக நாசம் செய்து நார்வேயை காட்டிக்கொடுத்த பாதகன் ஹேர் க்விஸ்லிங் என்பவன், 'க்விஸ்லிங்' என்றால் துரோகியென்ற உலகம் பழிக்கும் அபகீர்த்தியை இதனால் இவன் பெற்றுக்கொண்டான்.

ஸ்திரீகள் வம்பிலாசைப் பட்டவர்களாதலால் 5-ம் படைக்கு மிகவும் உபயோகப்படுவார்கள். காதில் பட்ட எதையும், யோசனை செய்யாது எதிரியின் பித்தலாட்டமென்றறியாமல் தீவிரமாய் பிரசாரம் செய்வார்கள். சுதேச அரசாட்சியிடத்தில் கோபத்தை உண்டாக்கி, எதிரியினிடம் பயமும் திகிலும் வரும் படி செய்து விடுவார்கள்.

சுதேச அரசாங்கத்தில் கசப்புள்ளவர்களேயும், சர்வாதிகார ஆட்சி அபிமானிகளேயும், 5-ம் படைக்குள் மெள்ள இழுத்து விடும்; கடைசியில் இவர்கள் ஜெர்மன் கக்ஷியிலேயே சேர்ந்து விடுவார்கள்.

5-ம் படை இந்தியாவில் செய்யக்கூடியதீங்குகள் பல. யுத்தப்பிரயத்தனங்கள் செய்யமுடியாதபடி கட்டை போடலாம்; இந்தியாவின் நேசம் இங்கிலாந்துக்கு ஹிதமில்லாமல் செய்துவிடலாம்; அல்லது இங்கிலாந்துக்கு இந்தியா ஒரு பாரமாயும் செய்துவிடலாம்.

ஜெர்மானியரென்று தாங்களே ஒப்புக்கொண்ட சில ஜெர்மன் ஆண்மக்களே அக்மத்நகரத்தில் கைது செய்து வைத்திருப்பதிலிருந்து இந்தியாவில் 5-ம் படையில்லையென்று நினைக்கக்கூடாது. 5-ம் படையென்ற விஷப்பூண்டு வளர இந்தியா தகுதியான மண். அதற்கு வேண்டிய ஏவலாளரும், ஜெர்மன் அபிமானிகளும் இந்தியாவில் இருக்கிறார்கள்.

ஜனநாயக ஆட்சியை பிரமாதமாய்ப் புகழும் இந்த நாட்டில் ஹிட்லர் அபிமானிகள் இருப்பது ஆச்சரியம் தான். ஆனால் இந்த நோக்கம் கொண்டவர்கள் இருப்பதில் சந்தேகமில்லை. உற்றறிவாளருடைய அபிப்பிராயம் இது. இவர்கள் பிரிடன்மேல் கோபங்கொண்டவர்கள் மட்டுமல்ல; ஹிட்லர் தத்துவத்திலேயே மோகங்கொண்டவர்கள். இவர்கள் வேதுவாய் வாலிபர்கள். இளம்பிராயத்தில் ஜெர்மனிக்குப்போயோ, அல்லது ஜெர்மன் பிரசாரகர்கள் கையிலகப்பட்டோ புத்திமாறியவர்கள்.

இக்கரைக்கு அக்கரை பச்சை. அயல் நாட்டு சினிமா நடிகர்களே வாலிபர்கள் தெய்வமாகக் கொண்டாடவில்லையா? இந்த மோகத்துக்கெல்லாம் இளவயது காரணம். ஆகையால் எங்கேயோ இருக்கும் ஹிட்லரிடத்தில் மோகமும் பக்தியு மேற்பட்டு விடுகிறது. அதுவும் சில வெற்றிகளடைந்து விட்டதாகக் கேள்விப் பட்டு மயங்கி, வசியம் விபரீதமாய் முடிகிறது.

ஜெர்மன் ஒலிபரப்பாலும், இதர ஜெர்மன் பிரசாரங்களாலும் சில இந்தியர்களுக்கு ஹிட்லரிடத்தில் பிரமையேற்பட்டிருக்கிறது. இவர்கள் உண்மை தெரியாது கனவு காண்பவர்களென்றாலும், ஹிட்லரின் கண்டிப்பு, நிர்தாக்ஷண்யம் முதலிய குணங்களே மகிழ்ந்து, அவரை 'தீரன்' 'வீரன்' 'எடுத்தகாரியத்தை முடிக்கும் வல்லபன்' என்று புகழ்கிறார்கள்,

ஆனால் வெகுதூரத்திலிருப்பதால் இவர்களுக்கு ஜெர்மானியரின் சுபாவம் தெரியாது. பிறரை ஹிம்ஸை செய்து வேடிக்கை பார்ப்பதிலுள்ள திருப்தியும் மிருகத்தன்மையும் ஜெர்மானியர்களுக்கு இருப்பது இவர்களுக்குத் தெரியாது.

வம்புப்பேச்சு, திகிலுண்டாக்கும் பேச்சு, தோல்வியென்றபேச்சு, ஆக்ஷேபம், அந்தரங்கங்களை வெளியிடுதல் — இவைகளெல்லாம் 5-ம் படைக்குச் சாதகமாகும். ஆகவே வம்புப் பேச்சையும், திகிலடையும்படி செய்யும் காரியங்களையும், சட்டப் படி குற்றங்களென்று சில இடங்களில் விதித்திருக்கிறார்கள்.

அனுபந்தம் III.

ஜெர்மன் பொய்கள்.

30—7—40.

1. *"விமான எதிர்ப்பாலும், நீர் மூழ்கிகளெதிர்ப்பாலும் இங்கிலாந்துக்குச் சேதமதிகம்."*

குறிப்பு :—சாம்ராஜ்யத்தில் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு, பெரிய சைன்யங்கள் பலதடவைகள் கோண்டுபோய்வந்ததில், ஒரு உயிராவது, கப்பலாவது இதுவரையில் சேதமாகவில்லை. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, 1,500 டன் நிறையுள்ள சிறுகப்பல்களிலிருந்து க்யூனார்ட், ஒயிட்ஸ்டார் பெரியகப்பல்கள்வரை, எல்லா விதக்கப்பல்களும் துருப்புக்களை ஏற்றிப்போயிருக்கின்றன : சேதமே கிடையாது. கப்பல்களில் பிரயாணம் செய்த துருப்புக்களும், அவைகள் புறப்பட்ட இடங்களும், வந்துசேர்ந்த இடங்களும் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன. கானடியர்கள், பிரிடன், ஐஸ்லாண்ட், மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் ; நியூபவுன்டலண்டார்கள் பிரிடனுக்கும்; ஆஸ்திரேலியர்கள், நியூ ஸிலாண்டர்கள் மத்திய கீழ் நாடுகளுக்கும், பிரிடனுக்கும்; தென் ஆபிரிக்கர்கள், கீழ் ஆபிரிக்காவுக்கும், இஜிப்துக்கும்; இந்தியர்கள் கீழ் ஆபிரிக்காவுக்கும்; பாலஸ்தானியர்களும், ஸிப்ரியர்களும் பிரிடனுக்கும், பிரிடிஷ் துருப்புகள், பேர்முடா, ஜமேகா, ஐஸ்லாண்ட், ஸேன்ட் ஹெலினா, இந்தியா, சிலோன், சிங்கப்பூர், ஹாங்காங், இஜிப்த்,

கீழ் ஆபிரிக்கா, மொரிஷஸ், மால்டா, ஜிப்ரால்டர், ஸைப்ரஸ், பாலஸ்தினம், ஏடன், கோல்ட் கோஸ்ட், ஸியராலியோன், நைஜீரியா முதலியவிடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ராணுவப் பயிற்சி சாலைகள் பிரிடனிலிருந்து ஆஸ்திரேலியா, தேன் ஆபிரிக்கா, கானடாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

2. *"ஜெர்மன் பாய்ச்சல்—வெடிகுண்டு விமானப்படைகள் இரண்டு டோவர் துறைமுகத்தைத் தாக்கி 32,000 டன் பாரக்கப்பல்கள் நான்கைப் பழுதாக்கி விட்டன: இவைகள் சேதமானதாகவே வைத்துக்கொள்ளவேண்டும்." (ஜெர்மன் ராணுவ இலாகா அறிக்கை).*

குறிப்பு :—டோவர் எதிர்ப்பில் அடிபட்டு மூழ்கியது ஒரு சிறு கப்பல்தான். அதிலிருந்த ஒருவன் சிறு காயங்களோடு ஓடிவிட்டான்: வேறு சேதமொன்றுமில்லை.

3. *"ஸர் கிங்ஸ்லி வுட்* (Sir Kingsley Wood) *சமீபத்தில் சமர்ப்பித்த வரவு, செலவு திட்டத்தில், தொழிலாளருக்கும், மத்தியம அந்தஸ்து பிரஜைகளுக்கும் வரியைச் சுமத்திவிட்டார். இவர்கள் பிரதிநிதிகளான தொழிற்கக்ஷித் தலைவர்கள் தங்கள் பொறுப்புக்குத் தக்கபடி ஆக்ஷேபிக்கவில்லை."*

குறிப்பு :—எல்லாக் கக்ஷிகளும் ஒருமனப்பட்டிருப்பதற்கு இதுவே சாக்ஷி.

4. *"டென்மார்க் பிரஜைகளின் உணவை அநியாயமாய், ஜெர்மன் சைன்யங்கள் பிடுங்கிக்கொள்ளுகின்றனவென்று லண்டன் ஒலிபரப்பு சொல்லுகிறது. உண்மையில், ஜெர்மன் துருப்புக்களுக்கு ஜெர்மனியிலிருந்து தான் ஆகாரம் வருகிறது."*

குறிப்பு :—(1) "டென்மார்க் விளைபொருள்களெல்லாம் ஜெர்மனிக்கு அனுப்பவேண்டும்" (ஜெர்மன் ஒலிபரப்பு—ஏப்ரல் 24).

(2) "சமையலுக்கு பெட்ரோல் திட்டம் போடவேண்டுமென்ற கேள்விக்கு பெட்ரோல் கொடுக்கமுடியாது: சமையல் வேறு எப்படியாவது செய்துகொள்ளவேண்டும்" என்பது பதில். (காலன்ட்போர்க் ஒலிபரப்பு—ஏப்ரல் 24).

5. *"ருமேனியாவிலிருந்து ஏராளமாய் எண்ணெய் வரத்திருப்பதால் எண்ணெய்க்கும், பென்ஸினுக்கும் குறைவு ஜெர்மனிக்கு ஏற்படாது. "(அமெரிக்கா எண்ணெய் நிபுணர் அபிப்பிராயம்).*

குறிப்பு :—அமெரிக்க நாடுகளைத்தவிர இதர நாடுகளுக்கு விமான எண்ணெய்கள் ஏற்றுமதி நிறுத்தியதிலிருந்து, ஜெர்மனிக்கு ரஷியா, ருமேனியாவிலிருந்துதான் எண்ணெய் வாங்க அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஜெர்மன் அதிகாரத்தால் எடுக்கக்கூடிய எண்ணெயை ருமேனியாவில் அதிகப்படுத்த முடியாது. தவிர, எடுப்பதைவிட

அனுப்பிக்கும் கஷ்டமதிகம். ஏற்றிச்சேல்ல 220,000 டன் நிறைகோண்ட 300 படகுகள்தான் ருமேனிய நதியான டான்யூ பிலிருக்கின்றன. இவைகள் வருஷத்துக்கு 7 நடைகள் போக முடியும். ஆகவே, மொத்தத்தில் 1,540,000 டன் எண்ணெய் தான் ஏற்றிச்சேல்லலாம். எண்ணெயெல்லாம் ஜெர்மனி எடுத் துக்கொள்ளமுடியாது. ஜெர்மனிக்காக தளவாடங்கள் செய்து வரும் இதரநாடுகளுக்கும் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும். ஏப்ரல் முடியப் போட்ட கணக்குப்படி, வெகு பிரயாசையோடு ரெயில் மார்க்கமாய் மாதத்துக்கு 25,000 டன் எண்ணெய் கொண்டு வரமுடிந்தது. ஆகையால், 1,500,000 + 300,000 = 1,800,000 டன் எண்ணெய்தான் ருமேனியாவிலிருந்து ஜெர்மனிக்கு வரக் கூடும்.

31—7—40.

6. *"பிரிடிஷ் விமானங்களைக்காட்டிலும் ஜெர்மன் விமானங்கள் உயர்வு என்கிற விஷயத்தை பிரிடிஷ் சமாசார கண்டன (Censor) இலாகா மறைக்க முடியவில்லை" (நியூயார்க் போஸ்டின் பெயர்போன விமான நிபுணர் அபிப் பிராயம்).*

குறிப்பு:—இந்த அநாமதேய 'நிபுணர்' யாரென்று தெரியவில்லை. புகழ் பெற்ற அமெரிக்க விமான நிர்மாணரான மேஜர் அலெக்ஸாண் டர் ஸெவர்ஸ்கியின் அபிப்பிராயம் கீழே காணலாம்:—பிரிடன் பாதுகாப்புகளை முறியடிக்காமல் பிரிடனைப் பிடிக்கமுடியாது. இது இப்பொழுது ஜெர்மனிக்கு சாத்தியமில்லை. பிரிடிஷ் ஸ்பிட்பைர், ஹரிகேன் விமானங்களைக்காட்டிலும், வேகத்தி லும், தூரப்பிரயாணத்திலும், பீரங்கிகளிலும் ஜெர்மன் மேஸ் ஸர்ஸ்மிட் விமானங்கள் கீழ்ப்பட்டவைகள். யூங்கர், ஹெயின் கல் என்ற ஜெர்மன் வெடி விமானங்களும், கவசத்திலும், பீரங்கிகளிலும் பலமற்றவைகள்."

7. *"பிரிடனால் கடன் ஏற்பட்டு அதிருப்தி உண்டாகி இஜிப்தில் கலகம் வரும்போலிருக்கிறது."*

குறிப்பு:—"இதாலிக்கு ஜயமில்லாதபடி கடவுள் தடுப்பாராக. இதாலியின் வெற்றி இஜிப்தின் ஆபத்தாகமுடியும். இஜிப்தின்மேல் இதா லிக்கு ஆசையில்லையென்ற பேச்சேல்லாம் பொய். ராஜீய விஷ யங்களில் இங்கிலாந்துடன் உடன்படிக்கையேற்பட்டு ஒருவித தெளிவான அந்தஸ்தை நாங்கள் அடைந்திருக்கிறோம். எங்கள்

பருத்தி முதலிய விளைபொருள்களை இங்கிலாந்து வாங்கிக்கொள்ளுவதால், எங்கள் வியாபார அபிவிருத்திக்காக இங்கிலாந்தின் க்ஷேமத்தையும், வெற்றியையும் நாங்கள் பிரார்த்திக்கிறோம்'' (அஷ்மத் மாஹர் பாஷா—பிரதிநிதி சபை அக்கிராசனர்—ஸாடிஸ்ட்கக்ஷித் தலைவர்).

1—8—40.

8. *"இந்த வருஷம் பருவநிலை நன்ருயிருந்தால் ருமேனியாவில் விளைவு அதிகம்; ஏராளமாய் ஏற்றுமதி செய்யலாம்."*

குறிப்பு :—இந்த வருஷத்தைப்போல் விளைவு குறைவாய் எப்பொழுதுமிருந்ததில்லை. ஏற்றுமதி செய்ய மிஞ்சாது. விளையும் கோதுமையில் கால்பங்கு பெஸரேபியாவிலிருந்து ரஷியாவுக்குப் போய்விடுகிறது.

9. *"இங்கிலாந்துக்கும் இஜிப்துக்கும் கப்பல் போக்கு வரத்து நின்றுவிட்டபடியால் இஜிப்துக்கு வியாபாரத்தில் நஷ்டம் அதிகம்."*

குறிப்பு :—(1) துணைக்கப்பல்களோடு பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் மத்தியதரைக் கடலில் போக பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் இதாலி கப்பல்களைத் துரத்தி, வழி செய்திருக்கின்றன. இந்த மார்க்கமாக ராணுவ சாமான்களும், இதர சரக்குகளும் அலெக்ஸாண்டிரியாவுக்கு வந்துசேர்ந்துவிட்டன. செங்கடலிலிருந்த இதாலிய நீர்மூழ்கிகளை அமிழ்த்தியதிலிருந்து செங்கடலில் அபாயமின்றி இஜிப்த்துக்கு வேண்டிய சரக்குகள் வந்துகொண்டிருக்கின்றன.

(2) பிரிடிஷ் வன்மையால், இதாலி கப்பல் படை இஜிப்து வியாபாரத்தைத் தடுக்கமுடியவில்லை : அயல்நாட்டு ஏற்றுமதிச் சாமான்கள் வந்துகொண்டிருக்கின்றன. (நடுநிலைநாட்டுச் செய்தி—துருக்கி அராபிக் ஒலி பரப்பு—ஜூலை 31).

(3) வழக்கம்போல் இஜிப்துக்கு சாமான்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதாலி கப்பல்படை மஸாவாவிலும் அஸ்ஸாபிலும் அடைபட்டுக்கிடக்கின்றன. இந்திய சமுத்திரத்திலும், செங்கடலிலும் பிரிடிஷ் கப்பல்படைகள் நிற்கின்றன. பிரிடிஷ் போக்குவரத்து இதாலிய கப்பல்களால் தடைபடவில்லை. (துருக்கி—ஆங்கில ஒலிபரப்பு—ஜூலை 31).

10. "*ப்ளாண்டர்ஸ், வடபிரான்ஸ் பிரஜைகள் கஷ்டம் தேசீய சமத்துவ பொதுநல சங்கங்களால் நிவர்த்திக்கப்பட்டது.*"

குறிப்பு:—ஆண்ட்வர்பிலும், ப்ளாண்டர்ஸ் பெரும்பாகத்திலும் வெண்ணெய்க்குப் பஞ்சமென்றும், அதற்குக் காரணம் அதிகாரிகள் கவனக்குறைவென்றும், வெண்ணெய் எல்லாவிடங்களுக்கும் சரிவரப் பிரித்துக்கொடுக்கப்படவில்லையென்றும், ஜெர்மன் ராணுவங்கள் வெண்ணெயை அதிகமாக எடுத்துக்கொள்ளவில்லையென்றும் பரஸல்ஸ் ஒலிபரப்பு ஜுலை 25-ம் தேதி தெரிவித்தது. அதே இரவு டியூட்ஸ்லான்ட் ஸெண்டர் ஒலிபரப்பு "ஜெர்மானியர் ஒவ்வொருவருக்கும் 15 கிராம் வெண்ணெய் அதிகமாய்க் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டோம்" என்று பிரசாரம் செய்தது.

3—8—40.

11. "*நியூகினியை ஆஸ்திரேலியா தன் சைன்யத்தைக்கொண்டு ஆளுகிறது. இது சட்ட விரோதம். பிரஜைகள் அனுமதியில்லாமல் அவ்விதம் ஆளக்கூடாது.*"

குறிப்பு:—போலண்டு, நார்வே, ஹாலண்ட், பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸு சம்மதப்பட்டுத்தான் ஜெர்மனி இவைகளை இப்பொழுது ஆளுகிறதோ?

12. "*ஹிட்லர் ரைச்ஸ்டாகில் பேசிய பிரசங்கசாரத் துண்டுப்பத்திரிகைகளை வியாழக்கிழமை இரவு ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தில் போட்டபோது விமான-எதிர்ப்பு-பாதுகாப்பு அதிகாரிகள் பொறுக்கி அப்புறப்படுத்தினர்கள்.*"

குறிப்பு:—அறிக்கை மந்திரி மிஸ்டர் டப்கூபர் ஆகஸ்ட் 3-ம் தேதி பின்வருமாறு ஒலி பரப்பினர்.—"வெகு சிரமப்பட்டு ஜெர்மனியிலிருந்து பறந்துவந்து இங்கே போட்ட துண்டுப் பத்திரங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் மலைக்கும்படி ஒன்றையும் காணோம். 3 பத்திகளாக 4 பக்கங்களில் சாரமில்லாத ஹிட்லர் பேச்சு பூராவாக அச்சடிக்கப்பட்டிருந்தது. ஹிட்லர் பிரசங்கம் செய்த, அதாவது ஜுலை 19 தேதிக்கு மறுநாள் காலையிலேயே இந்த பிரசங்கம் பிரிடிஷ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. அன்றைக்கே எண்ணம் கொண்டவர்கள் படித்திருப்பார்கள். 15-நாட்கள் கழித்து, விமானத்திலிருந்து போடப்பட்டு படிக்க வேண்டிய அவசியம் எவருக்குமில்லை."

4—8—40.

13. ஹாலண்ட், டென்மார்க், நார்வே விளைபொருள்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாமாதலால் யுத்தம் ஆரம்பித்தபோது இருந்ததைவிட இப்பொழுது ஜெர்மனிக்கு ஆகாராதிகள் அதிகம்" (உருக்வே பத்திரிகை எல் டிபேட் எழுதுவது).

குறிப்பு :—கொள்ளையடிப்பதில் ஜெர்மனிக்கிருக்கும் சாமர்த்தியத்தை ஒருவரும் மறுக்கவில்லை. ஆனால் ஆகஸ்ட் **2**-ம் தேதி நியூயார்க் ஸன் பத்திரிகை எழுதுவதை கவனிக்கவேண்டும் :—ஐரோப்பாவில் பஞ்சம் கிட்டிவிட்டது என்று சொல்லுவது சரியல்ல. பஞ்சம் ஏற்கனவே வந்துவிட்டது. பரிசோதனை செய்த நிபுணர்கள் அபிப்பிராயமிது. வார்ஸாவைச் சுற்றியிருக்கும் **60**, **70** லக்ஷம் ஜனங்கள் பஞ்சத்தால் ஏற்கனவே கஷ்டப்படுகிறார்கள். பேல்ஜியம், ஹாலண்ட், நார்வே, டேன்மார்க், பிரான்ஸ் தேசத்தவர்கள் கஷ்டம் இதற்குமதிகம்.

14. "அலகாண்டாரா கப்பல் வெற்றிப் பிரதாபங்களைப்பற்றி பிரிடிஷ் கடல் படை இலாகா வர்ணிக்கிறது நடப்பொன்றுமில்லை." (ரியோடிஜெனிரோ பத்திரிகைகள்).

குறிப்பு :—'வெற்றி' என்று நாம் சொல்லவில்லை : சண்டை செய்ததென்றுதான் கப்பல் படை இலாகாவின் அறிக்கை.

15. "பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கு பலமுண்டென்பதை மறுக்கவில்லை; ஆனால் சாம்ராஜ்யம் நாளுக்கு நாள் க்ஷீணிக்கிறது."

குறிப்பு :—பலமிருந்தால் க்ஷீணிப்பானேன் ?

16. "இதுவரையில்லாத விலை கொடுத்து ஹாலண்ட் காய்கறிகளை ஜெர்மானியர்கள் வாங்குகிறார்கள்."

குறிப்பு :—அதாவது, இதுவரையிலில்லாத குறைந்த விலையா ?

5—8—40.

17. "இங்கிலாந்தில் பணமுள்ளவர்களுக்கு அளவுக்குமிஞ்சி இறைச்சி கிடைக்கிறது. ஏழைகளுக்கு இறைச்சியே கிடையாது."

குறிப்பு :—பணக்காரர்களுக்கு அதிக திட்டம் கிடையாது. சம விலைக்கு தலைக்கு இவ்வளவென்று திட்டப்படி பிரித்துக்கொடுக்கப்படுகிறது.

18. "இந்தியாவில் கோதுமை விலைக்கு அகப்படவில்லை."

குறிப்பு:—என்ன பொய்!

19. "ஜெர்மன் விமானங்களிலிருந்து கீழே போடப்பட்ட ஹிட்லர் பிரசங்கத்தை பிரிடிஷ் ஜனங்கள் மரியாதையாய் படித்துப் பார்த்தார்கள்."

குறிப்பு:—பிரிடனிலும், இந்தியாவிலும், விஸ்தாரமாகவும், பிழையின்றியும், பிரசங்கம் செய்த சில மணி நேரத்துக்குள்ளாக பத்திரிகைகளில் ஹிட்லர் பேச்சு வெளிவந்தது. இந்தப் பிரசங்கத்தை இரண்டாம்தடவை படிக்க பிரிடிஷாருக்கு ஆசையில்லை. ஒரு பிரிடிஷ் மாது கீழ்விழுந்த துண்டுப்பத்திரங்களைப் பொறுக்கி ஏலம்போட்டு, இரண்டொரு பவுன் சேகரித்து செஞ்சிலுவைச் சங்கத்துக்கு, சமர்ப்பித்தாள்.

ஜெர்மனியில் இம்மாதிரி, எதிரிகள் போடும் துண்டுப்பத்திரங்கள் படிப்பவர்களைத் தண்டிப்பார்கள்.

இதாலிய பொய்கள்.

30—7—40.

20. "ஆஸ்திரேலியாவைப்போல் கானடாவும் அனுதாபத்தை வார்த்தையில் காண்பிக்கிறதேயொழிய காரியத்திலொன்றையும் காணோம்."

குறிப்பு:—சாம்ராஜ்ய நாடு ஒவ்வொன்றும் எப்போதும்போல இங்கிலாந்தோடு இணைபிரியாது நிற்கிறது. ஜெர்மனியோடு சமாதானம் செய்துகொள்ள ஒரு தேசத்துக்குமிஷ்டமில்லை. (ஜெர்மன் ஒலிபரப்பு-ஜூலை 24).

2—8—40.

21. "இதாலியர்கள் நாலே நாட்களில் பிடித்துவிட்ட பிரெஞ்சு அரண்களைப் பார்வையிட அயல்நாட்டுப் பத்திராதிபர்களுக்கு அனுமதித்ததற்காக இவர்கள் முஸோலினிக்கு வந்தனம் அனுப்பியிருக்கிறார்கள்."

குறிப்பு:—அரண்களைப் பிடித்தது சமாதானம் செய்துகொண்ட பிறகு.

4—8—40.

22. *"அமெரிக்காவில் செய்யப்படும் யுத்த தளவாடங்களை இனி அமெரிக்கா தனக்கு வைத்துக்கொள்ளுமேயொழிய இங்கிலாந்துக்குக் கொடுக்காதென்று அகில-அமெரிக்கா மகாநாட்டு சம்பவங்களிலிருந்து தெரிகிறது."*

குறிப்பு :—"ஜேர்மனி, இதாலி ஒரு பக்கமும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றொரு பக்கமுமாக பலத்த யுத்தம் நடக்கும்போலிருக்கிறது" என்று ஆகஸ்ட் முதல் தேதி மாஸ்கோவில் எம். மோலடாவ் தன் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். இதிலிருந்து அமெரிக்கா வேண்டிய உதவிகளைச்செய்யுமென்று தெரிகிறது.

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

LECTURE VII.

1940—

August 24, Saturday	...	Town Hall ...	6.30 p. m.
25, Sunday	...	Yembal ...	4.30 p. m.
		Kulipirai ...	5.00 p. m.
		Tirumayyam ...	5.00 p. m.
		Konapet ...	5.00 p. m.
26, Monday	...	College ...	10.25 a. m.
		Rani's School ...	10.30 a. m.
		Vendampatti ...	5.00 p. m.
27, Tuesday	...	C. S. M. School ...	10.00 a. m.
		Arimalam ...	5.00 p. m.
		Karambakkudi ...	5.00 p. m.
		Venkatakulam ...	4.30 p. m.

LECTURE VIII.

31, Saturday	...	Town Hall ...	6.30 p. m.
September 1, Sunday	...	Virachalai ...	5.00 p. m.
2, Monday	...	College ...	10.25 a. m.
		Rani's School ...	10.30 a. m.
		Viralimalai ...	5.30 p. m.
		Nachandupatti ...	5.00 p. m.
3, Tuesday	...	C. S. M. School ...	10.00 a. m.
		Rayavaram ...	5.00 p. m.
		Alangudi ...	5.00 p. m.
		Keeranur ...	5.00 p. m.
5, Thursday	...	Ramachandrapuram ...	5.00 p. m.
		Kilanilai ...	5.00 p. m.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—24-8-40.